ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

## ஸம்சயம்.

### ஆர்யதர்மாபிமானிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

1. போதாயன ஸூத்திரக்காரர்களுக்கு (பித்ருதிதி அமாவாஸ்யை) ஷ்டி அமாதிதி சிராத்தத்தை போதாயன அமாவாஸ்யா தினமே செய்யவேண்டியதா? அல்லது மறுநாள் அமாவாஸ்யையில் செய்யவேண்டியதா? இந்த ஆசங்கைக்கு ஸமாதானத்தை பிரமாணத்துடன் பெரியவர்கள் இந்தப் பத்திரிகையின் வாயிலாகவே தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

## பஞ்சகவ்யம்.

2. பஞ்சகவ்யம் என்பது எப்படி சேர்க்கவேண்டியது? எவ்வளவு இடைகள்? எத்தனை கோவினிடமிருந்து திரவியம் கொண்டுவர வேண்டியது? என்ற இதுபோன்ற பஞ்சகவ்ய ஆசங்கைக்கும் ஸமாதானத்தையும் இதன் வாயிலாகவே வ்யக்தமாய் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறன்.

V. S. வெங்கட்டராமசாஸ்திரி.
Hydrabad.

---

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ புரட்டாசி-௴ ௨௯௳

## சர்மாவின் சங்கைகளுக்கு ஸமாதானம்.

(454வது பக்கத்தொடர்ச்சி.)

மேலும் இவர் புருஷர்களுடைய ஆயுள் விஷயத்தில் வேதபுராண விரோதங்காட்டியிருப்பதும் பிசகு. வேதபுராணமிவை இரண்டிலும் புருஷர்களுக்கு ஆயுள்காலம் 100வயதுதான் என்று பொதுவாக விதித்திருக்கின்றது. இஃதன்றி வேதத்தில் 400 என்றும், புராணங்களில் மற்றொருவிதமென்றும் இரண்டு ஸங்கியையும் வேதப்பிரமாணஸித்தமில்லையாதலால் வேதபுராணங்களில் இல்லாதகாலவிசேஷத்தையிருப்பதாகவரைந்துகொண்டுவிரோதம் வந்துவிட்டதே என்று கேள்விகேட்பது ஸாஹஸமன்றோ? சர்மா நூறு வருஷபரியந்தம் ஜீவனத்துடன்இருக்கக்கூடிய காரியத்தை மட்டிலும் செய்வாரா ? எதற்காக நாம் நானூறு வருஷம் ஜீவிக்கவேண்டும். ஸர்வேச்வரனாலும் ஸர்வக்ஞர்களாகிய மஹரிஷிகளாலும் கருணையாலும் உபதேசிக்கப்பட்ட வைதிகமதத்தைக் கண்டபடி தூஷித்து அதனாலுண்டாகும் பாபத்தை மூட்டை மூட்டையாகச் சுமந்து நரகாதிகளை அனுபவித்து துக்கித்துக் கொண்டிருப்பதற்காகவா நாம் நானூறு வருஷம் ஜீவிக்கவேண்டும். புண்யசாலிகள் எவ்வளவு காலம் ஜீவித்திருக்கிறார்களோ அவ்வளவும் நமக்கு நன்மையேயாகும். தற்காலத்திய வர்ணாச்ரமத்வேஷிகளதிககாலம் ஜீவித்திருப்பதைவிட அதிக விரைவில் மாண்பதே சான்றாம்.

பிறகு அவதாரத்தையாக்ஷேபித்துவிரோதங்கூறியிருப்பதும் உண்மையல்ல.

ஸர்வேச்வரனுடைய தத்வத்தையறிவிக்கும் விஷயத்தில் வேதபுராணங்களுக்குள் பரஸ்பரவிரோதம் யாதொன்றுமில்லை என்று முன்பு நிரூபித்துளோம்.

நிர்க்குணம் ஸகுணமென்றிருவிதம் பிரும்மமென்பது வேத புராணங்களிரண்டிலும் பிரஸித்தமே. நிர்க்குணபிரும்மம் ஸத்தியம், ஸகுணபிரும்மம் கற்பிதமென்பதும் அவ்விரண்டிலும் கூறப்பட்ட விஷயமே. நிர்க்குணப்பிரும்மத்திற்கு நாமரூப, ஸூத்திர கோத்திராதிகள் யாதொன்றுமில்லை. ஸகுணபிரும்மத்திற்கு நாமரூபாதிகள் கற்பிதங்களாகவுண்டு என்பதும் நிற்குணத்திற்குச் சரீரத்திரயமில்லை. ஸகுணத்திற்கு மாயிகமாகவும் ஸாங்கல்பிகமாகவும் உள்ள அனேகவித சரீரமுண்டென்பதும் வேதபுராணமிரண்டிலும் சமானமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கும்போது இவ்வீச்வரதத்வத்தில் வேதபுராணங்களுக்குள் விரோதமெப்படிப் பொருந்தும்? பக்தனைக்காற்கும்பொருட்டுத்தான் பகவான் மச்சகச்சபாவதாரங்களை எடுப்பதில் என்ன அனிஷ்டம்? விரோதந்தானென்ன?

இதற்குப்பிறகு கூறியிருக்கும் விரோதமும் ஸரியல்ல. ஸர்வேச்வரனுடைய சக்திமஹிமையால்தான் இப்பிரபஞ்சகாரியம் அனைத்தும் நடைபெறுகின்றதென்ற விஷயம் வேதபுராணங்கள் இரண்டிலும் விசதமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தில் இவை இரண்டிற்கும் சிறிதும் விரோதமென்பதில்லவே இல்லை. ஸர்வேச்வரனுடைய அபரிமித திவ்யசக்தி குணநிசயங்களையும் அவருடைய விசித்திரஸிருஷ்டிக்ரமத்தையும் பிரும்மாதிகளாலும் அறிந்துகொள்வது முடியாதென்றால் ஏனைய தற்காலத்து நவநாகரீகப்பிரியர்களால் எப்படி அறிந்துகொள்ளமுடியும்? ஆகவே பகவானுடைய சக்திமஹிமையையறிவிப்பதில் வேதபுராணங்களுக்குள் விரோதம் யாதொன்றும் காண்பிக்கமுடியாது.

தவிற ஸ்திரீகள் விவாஹவிஷயத்தில் வேதபுராணவிரோதங் காட்டியிருப்பதும் ஸரியல்ல. வேதத்தில் ஒரு ஸ்திரீ ஒரே புருஷனை விவாகம் செய்துகொள்ளும்படிமட்டிலும் விதிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி ஒரு புருஷனுக்கு ஒரு மனைவிதான் என்று கூறவில்லை. ஒருவனுக்கு 2, 3 மனைவியுமிருக்கலாம். ஒருவளுக்கு அனேக கணவனில்லை என்றல்லவா வேதவிஹிதமாயுள்ளது. சிஷ்டாசாரப்ராப்தமாயுள்ளதாகிய இவ்விஷயத்தை द्वेद्वेरशनेयूपमृच्छतः என்று ஆரம்பித்து யஜுர்வேதத்தில்

तस्मात्स्त्रियः पुंसोतिरिक्ताः तस्मादुतैको बह्वीर्जायाविन्दते नैकाबहून्पतीन् ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறதே. புராணவசனங்களைப்பிரமாண மாக நம்பாத நமதுநண்பர் யுக்திப்பிரமாணத்தையும் நம்பமாட்டா ராதலால் இவருடன் இவ்விஷயத்தில் யுக்திவாதம் பேசுவது அநாவசியமே. ஒரு ஸ்திரீக்கு ஒரு புருஷன்தானென்பதற்கு இந்த ஒரு சுருதிவசனம் போதாதா? வேதவிருத்தமாக புராணுதிகள் சிஷ்டசம்மதமற்றதும் ஜாதிஸங்காத்தை உண்டுபண்ணக்கூடிய தும் வருணுச்ரமதர்மமார்க்கத்தை அடியோடுமாற்றி சீர்கேட்டை அடையும்படி செய்யக்கூடியதும், மேனுட்டு நாகரீகமயமாக நன்னுடாகிய நம் நாட்டை செய்வதற்கு மூலகாரணமாயும் விளங்கும் விதவாபுனர்விவாஹத்தை விதிக்குமா! விதவாவிவாஹமானது ஸகல வேதஸ்மிருதி நிஷித்தமன்றோ? ஸ்திரீகளின் விவாஹவிஷயத்திலும் விதவாவிவாஹவிஷயத்திலும் சாஸ்திரப்பிரமாணவாயிலாகவும் யுக்திமூலமாகவும் விசாரிக்கவேண்டிய விஷயங்களை தர்மசாஸ்திரங்களில் கண்டு தெளிக.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அனேக ஸ்திரீகளை மணம் புரிந்து கொண்டு "ராஸக்ரீடை" முதலியவை செய்ததால்தான் தற்காலத்தியவர்களும் மனம்போன போக்கெல்லாம் போகும்படி நேரிட்டதென்று இவர் சொல்வது வெகு அநுசிதம்.

பகவான் கிருஷ்ணர் ராஸக்ரீடை முதலிய லீலைகள் புரிந்தது காமவெறியாலல்லவே. தற்காலத்தியவர் விரும்பும் லீலை காமவெறியாலல்லவா கோறப்படுகின்றது. இவ்விதம் காமவெறி கொண்டு இங்குமங்கும் அலைந்து திரியும் பாமரர்களையும் தமது சரணுரவிந்தங்களிலீடுபடும்படி செய்வதற்காகவே பகவான் யதுகுலத்திலவதரித்து மனிதலீலைகளைப் புரிகின்றுரேயன்றி நம்மைப் போல் காமவெறி கொண்டு அனேக ஸ்திரீலீலைகளைச்செய்யவில்லை. அனேக கோபஸ்திரீகளுடன் அனேக லீலையை அவர் செய்திருந்தும் அவருடைய பிரும்மசர்யம் கொஞ்சமும் குறையவில்லை என்றல்லவா ஸ்ரீ பாகவதம் கூறுகின்றது. வேதாந்ததேசிகர் முதலிய மஹான்களும் அவ்விதமேஎழுதியிருக்கின்றுர். ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன் ராஸக்ரீடை முதலிய லீலை புரிந்ததும், ராஸக்ரீடை முதலிய லீலையையறிவிக்கும் பாகவதகதையும் யுக்தியுக்தந்தான். இவ்விஷயத்தின் ரஹஸ்யம் விஸ்தாரமாக அவதாரதத்வரஹஸ்யத்தில் காண்க. அன்றியும் பிராமணர்களுக்கே அனேக ஸ்திரீகளை மணம் புரிந்துகொள்ளலாம் என்றுல் க்ஷத்திரியர்களுக்கு அனேக

ஸ்திரீவிவாஹம் ஏன் சாஸ்திரீயமாகாது? ஆனால் ஒரு ஸ்திரீயை மட்டிலும் விவாஹம் செய்துகொள்ளும்பக்ஷத்தில் அந்த க்ஷத்திரியன் ஸர்வோத்தமனாவான். இக்காரணத்தால்தான் ஸ்ரீராமாவதாரத்துக்கு கௌரவமதிகமென்பது. ஆகையால் புருஷர்களுக்கு அனேக ஸ்திரீவிவாஹம் சாஸ்திரீயமென்றும் ஸ்திரீகளுக்கு அனேக புருஷவிவாகம் சாஸ்திரீயமல்லவென்றும் ஸித்தித்தது.

ஆகவே சர்மாவால் எடுத்துக்காட்டப்பட்ட வேதபுராண விரோதமனைத்தும் ஸங்கதமாகவில்லை என்று நிரூபித்து முடித்துவிட்டபடியால் நமது வைதிகவர்ணாச்ரமதர்மத்திற்குமூலப்பிரமாணமாயுள்ள வேதம் அதன்மூலமாகவுள்ள ஸ்மிருதிபுராணகாவ்யாதிகளும் எக்காலத்திலும் எத்தேசத்திலும் நித்யமாயும் நிர்தோஷமாயுமுள்ள தர்மாதர்மங்களின் ஸ்வரூபத்தைப் பிரதிபாதிக்கின்றதால் அவற்றில் ஏதாவதொன்றிரண்டை சக்திக்குறியவாறு அனுஷ்டிப்பதாலும் அப்படி இரண்டொன்றையும் அனுஷ்டிக்க சக்தியில்லாதவர்கள் வர்ணாச்ரமதர்மம் மேலானது, ஆனால்நம்மால் அனுஷ்டிக்கமுடியவில்லையே என்று பச்சாத்தாபப்படுவதாலும் அதில் நம்பிக்கையாவது அடைவதாலும் அவற்றில் தோஷத்தையாவது ஆரோபிக்காமலிருப்பதாலும் அனுஷ்டித்து அடையக்கூடிய இஹபரமோக்ஷசுகமெல்லாவற்றையுமடைந்து க்ஷேமமாக வாழுலாமேயன்றி வேதம் புராணம் முதலியவை பிரமாணமில்லை, அவை காலதேசவர்த்தமானத்தை யனுஸரித்து சுயநலங் கருதிய முன்னோர்களால் சொற்பகாலத்திற்கு முந்தித்தானெழுதப்பட்டன. வேதத்தில் விதித்துள்ள காரியங்களுக்கும் புராணங்களில் கூறிய காரியங்களுக்கும் அனேக பேதமுண்டு. சிராத்தம் முதலிய காரியங்களுமவசியமில்லை. பிறவியாலேயே ஜாதிபேதமில்லை தருணீபரிணயம் விதவாவிவாஹம் ஸமுத்திரத்தைத்தாண்டுதலும் அவசியம் ஸர்வேச்வரனொருவனில்லை. எவ்விதத்திலும் வைதிகமதமே ஒழுங்கானதல்ல என்றிவ்வாறாக வைதிகமதத்தை ஆக்ஷேபித்து மேனாட்டு நடையுடைபாவனைகளையே கீழ்நாட்டிலும் நிலைநிறுத்திவிட்டால் கீழ்நாடு மேனாடாகுமா? வைதிகமதத்தைப் பின்பற்றினால்தான் கீழ்நாடு மேனாடாகும்.

धर्मे सर्वं प्रतिष्टितं । धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा ।

என்றல்லவா ஸர்வேசுவரனுடைய ஆக்ஞை?

श्रेयान्स्वधर्मो विगुणःपरधर्मात् स्वनुष्ठितात् ॥

என்ற கண்ணபிரானின் வசனம் ஞாபகத்திலிருக்கவேண்டும். வைதிகமதபர்வதத்தை யுக்திதுலத்தால் பேதித்துவிடுவதும் முடியாது. இவ்வுத்தமஸநாதநவைதிகமதமானது தன்னையனுஸரித்தவர்களுக்கு மேலான இம்மை மறுமை ஸுகங்களையளித்துவருவதுடன் அநேகமாயிரமாண்டுகளாக பல இன்னல்கள் தோன்றிச் சிறழித்தபோதிலும் என்றும் மாறாத யௌவநநிலையில் திடகாத்திரத்துடன் விளங்கிவருகின்றபடியால் அப்படிப்பட்ட வைதிகமதத்தின் ஸ்வரூபத்தையும் இயல்பையும் சக்தியையும் அதையனுஸரிப்பவாடையும் மஹாபலன்களையும் சொற்பகாலத்தில் நாம் எப்படி எடுத்துரைக்கச் சக்திவாய்ந்தவர்களாவோம்?

நமது மதமானது, இதர தேசத்தவர்களாலும், நம் தேசத்தில் சிலநவீந சீர்த்திருத்தகாரர்களாலும் வெகுவாய் தூஷிக்கப்பட்டபோதிலும், வேதசாஸ்திரங்களின் ஸஹாயபலத்தால் ஸர்வசிரேஷ்டமென்றே ஒப்புக்கொள்ளவேண்டியது. வைதிகமதத்தை எதிர்த்தமதங்களில் சில நசித்துவிட்டன, சில நமது வைதிகமதத்தையனுஸரித்துவிட்டன.

இதற்கு காரணம் வேதசாஸ்திரந்தான். நமது மதத்தைக் காப்பாற்றவந்த வேதசாஸ்திரங்களை அவமதிப்பதும், அவைகளுக்கு வேறு அர்த்தங்கூறுவதும் யுக்திசெய்வதும் தவறு. நமது மதத்தில் துர்பலமாயிருக்கும் காரியங்களை, துர்பலங்களாகவே ஒப்புக்கொள்வதில் என் அதைரியப்படவேண்டும், ஏனெனில், அவை துர்பலர்களாகிய மந்த மத்தியமாதிகாரிகளுக்காகவல்லவா ஸர்வேசுவரனாலும்,மகரிஷிகளாலும் ஏற்படுத்தப்பட்டவை. நமக்குள் காணப்படும் ஒவ்வொருகுறைகளையும் மதத்தின்மீது சுமத்தி நம்மையும்நாசம்பண்ணினதுமன்றி நம்புனிதநாட்டையும் நாசம் பண்ணுவது அநியாயமாகுமன்றோ? சிலநாட்களாக நம் நாட்டில், பல சீர்த்திருத்தசங்கங்களும், சீர்த்திருத்தக்காரர்களும், சமுத்திரத்தினின்றும் கிளம்பும் நீர் குமிழிபோல் தோன்றி தோன்றி வருகின்றார்கள். ஆனால், அவர்களெல்லாருமபஜயமடைந்தார்களேயன்றி, ஜயமடையவில்லை. அவர்களின் முயற்சிகளெல்லாம் வீணாயின, என்? அவர்கள் நமது வைதிகமதாஹஸ்யமுணராதவர்கள் அல்லவா? இச்சங்கங்களையுமிப்போது போற்றும்படித்தானிருக்கிறது, ஏனெனின் "வைதிகமதத்துவேஷமுள்ள சீர்திருத்த சங்கங்களபஜயத்தையடைந்துவிட்டதுபோல், நம் நண்பர்சர்மாவின்

வின்முயற்சியும் அபஜயமடையும், ஆகையால் வைதிகமதத்தை தூஷிக்காமல் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்" என்னு மிவ்விஷயத்தை இவருக்கு இவையறிவித்துவிட்டனவல்லவா? நமது வைதிகமதாஹஸ்யத்தை கிருஹித்துக்கொள்ள சக்தியில்லாமல், நாஸ்திக்யத்தையன்றி வேறெதையும் கனவிலும் காணாத ஜாதியாரிடமிருந்து. நாஸ்திக்யத்தைப் பயின்று நாஸ்திக்யம், ஆஸ்திக்யமிவ்விரண்டுங் கெட்டவர்களாக விளங்கி வினுக்களை எழுப்புவது வழக்கோ? ஆஸ்திகநாஸ்தி கமதங்களுக்கெல்லாம் ஆதாரமாயும், பிரமாணமாயும் விளங்கும் வேதபுராணுதி சாஸ்திரங்களைப் பிரம்மணர்களால் பாரபட்சமாக பின்னர் எழுதப்பட்டவை என்பதுதகுமா? பௌத்தரும்ஜைனரும்,வேதத்தின்ஸஹாயத்தைமறுக்கவில்லையே

ஸர்வவியாபகத்வம் பொருந்திய ஸர்வேசுவரஸ்வரூபத்தை மனதால் பாவிப்பது முடியாததுபற்றி அதற்கு ஸாதனமான பிரதிகோபாஸ்தி எனப்படும், ஸகுணேபாஸனத்தையனுஷ்டிக்குங் கிரமத்தில் விக்ரஹாராதானம் செய்தால், அதை பொம்மைவணக்கமென்று இகழ்வதுகூடுமா? இவை கிருஸ்து,மஹம்மது,மதங்களிலில்லையா? விக்ரஹாராதனத்தின் மஹிமையை யாறுணருவார்.

" एकं सद्विप्रा बहुधावदन्ति "

என்ற வேதமொழியின்படி ஒரேசூரியப்பிரகாசம், பலவிதவர்ணமுள்ள கண்ணடி வழியாய் பலவகையாகத் தென்படுவதுபோல் பகவானும், பலவித ஜீவர்களின் மனேபாவனையில் பலவிதமாகத் தோன்றி யுபாஸ்திசெய்து வருவதை யனுஸரித்து, ஒருவிதமாகவும், அனேகவிதமாகவும் தோன்றுகிறுரென்ற தத்துவமுணராமல், ஸர்வேசுவரனை நிந்திப்பது உசிதமா?

ஸ்மிருதி புராணுதிகளைவிட சுருதிப்பிரமாணம் மேலானதென்பதும், ஸ்மிருதிபுராணுதிகள் சுருதிக்கு விரோதமாயிருக்குமேயானல் சுருதியே ஆதரிக்கக்கூடயபிரமாணம், விரோதமில்லாவிட்டால். ஸ்மிருதிபுராணம், வேதம், இவை இரண்டுமே பிரமாணம் என்பதும் வைதிகஸித்தாந்தமென்று அறியாமல் வேத புராணவிரோதமுறைப்பது முறையாகுமா?

ஆகையால்இதுவரையில் நம்மால்நிருபிக்கப்பட்டவிஷயங்களை கவனமாயும், ஸூக்ஷ்மமாயும், பராமர்சம்பண்ணி அதன்மூலமாக, இவர் ஸம்சயத்தை விலக்கிக்கொள்ளவேண்டும்.

ஸத்குருவை அடுத்தால் ஸகலஸம்சயங்களுமொழிந்து புருஷார்த்தங்களைப் பெறலாமென்பதற்கிணங்க, இவர், தமதுசம்சயங்களை விலக்கிக்கொள்வதற்காக, தற்காலம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளாக விளங்கும் நமது ஆசார்யாரிடமிவர் . சரணமடைந்ததும், பெரும்பாக்கியமென்று போற்றக்கூடியதுதான் என்பதில் ஸந்தேகமில்லை. அவ்விதசம்சயங்களுக்கு ஸமாதானம் எழுதுவதில் பரமாசாரியாளினுக்ஞையையனுஸரித்துப் பிரவிருத்தித்த எனக்கும் பெரும்பாக்கியமே. க்ஷணநேரமாவது மதத்திற்குப்பாடுபடும்படி எற்பட்டதல்லவா? மதத்திற்காக நம்முன்னோர்கள், தம்மாயுள்காலம் எல்லாவற்றையும், உயிரையும், பொருளையும், தியஜித்தார்களல்லவா? தற்காலத்திலும், மகம்மதியர்களும், கிரஸ்தவர்களும், மதத்திற்கு உயிரை தானம், செய்வார்களென்பது பிரத்தியக்ஷமல்லவா? நமக்குமவ்விதமதாபிமானம் வேரூன்ற வேண்டுமல்லவா?

நாஸ்திகர்களுடைய நற்குணங்களை, ஆஸ்திகர்களும் பின்பற்றுவதில் என்னதோஷம்? நற்குணங்களை எங்கும் ஸ்வீகரித்துக் கொள்ளலாம் அல்லவா? ஆதலால், வேதங்களாலருளப்பட்ட வைதிகமதத்தில் நம்பிக்கை முதலில் வேண்டும். மற்றமதங்களுக்குத் தோஷமிருப்பதுபோல் வைதிகமதத்திற்குத் தோஷம் சிறிதுமில்லை. ஸம்ஸ்கிருத பாஷையையாவரும் பயிலவேண்டும். முன்னோர்களை பெரியோர்களென்று கொண்டாடவேண்டும். பிறகு கொஞ்சங்கொஞ்சமாக மதத்தில் எதாவதொன்றை அனுஷ்டிக்க முயலவேண்டும். அச்ரத்தையையும், அப்பிராமாண்யத்தையும் அகற்றவேண்டும். ஆத்மோந்நதியையும் தேசோந்நதியையும், சித்தசுத்தியையுமடையவேண்டும். மாதா, பிதா, குரு தெய்வமிவர்களிடத்தில் பக்திவிசுவாசம் பெருகவேண்டும், ஒருஜாதியை மற்றொருஜாதி நிந்திக்காமலிருக்கவேண்டும், மேனாட்டுப்பழக்கம் ஒழியவேண்டும், கீழ்நாட்டுப் புராதன புனித ஸம்பிரதாயம் செழிக்க வேண்டும்.

நாம் மகரிஷிகளாக விளங்கவேண்டும். நமது நாட்டு ஸ்திரீகள் அருந்ததிகளாக பிரகாசிக்கவேண்டும். நாம் அயல்நாட்டுக் கடிமைகளாகவிருக்கக்கூடாது. நம் நாட்டு ஸ்திரீகள் அயல்வீட்டுக்காரனுக்கு அடிமையாகவிருக்கக்கூடாது. ஆர்யதர்ம சாஸ்திரங்களை யொப்பவேண்டும். அஸ்பிருச்யதையையும் அங்கீகரிக்

கவேண்டும். மதத்திற்குப் பாடுபடவேண்டும். பணத்திற்குப் பாடு படலாகாது. இதுதான் வைதிக மதாஹஸ்யமாகும், இதுதான் மகரிஷிகளின் தாத்பரியமாகும், வீணில் குதர்க்கம் செய்துகொண்டு வாணாளை வீணாக்கவேண்டாம் இதுதான் க்ஷேமகரம், இதுதான் ஸ்ரீ ஸ்ரீமஹாஸன்னிதானத்தில் விரும்பிய ஆக்ஞானுக்ரஹமாகும்.

(சுபம்)

முற்றிற்று.

---

वैदिकाचारविद्वेषबधिरीकृतदृष्टिना ।
बुद्धिपूर्वमुपाक्षिप्तमाक्षेपं वैदिके पथि ॥

श्रुतिस्मृतिपुराणादिशास्त्राभिप्रेतवर्त्मना ।
यथामति निराकृत्य वैदिकोऽध्वा परिष्कृतः ॥

अनेन भगवान्नूनं चन्द्रमौलीश्वरो हरः ।
सानुग्रहदयादृष्ट्या तृप्यत्येवेति मे मतिः ॥

॥ ॐ तत्सत् ॥

வி. ஜகதீச்வரசாஸ்திரிகள்.

---

# ஸூர்ய நமஸ்காரம்.

சென்ற 20-வது ஸஞ்சிகையில் கண்ணுற்ற ஷடி சந்தேகத்திற்கு அப்பொழுதே பதில் எழுத சித்தமாயிருந்த எனக்கு அச்சமயம் ஏற்பட்ட வியாகுலத்தால் இறகேந்த விருப்பமற்றிருந்தேன். இப்பால் கனபாடிகளுடைய பிரேரணை உத்ஸாகத்தை உண்டாக்கினதுபோலும்.

மானிடர் தந்தம் இஷ்டத்தையடைய ஒவ்வோர் தேவதையை ஆராதிப்பதில் வியாதியற்றிருப்பதை ஸூர்யனிடமிருந்தே அடையவேண்டும். **आरोग्यं भास्करादिच्छेत्** என்பதால், அந்த ஸூரியனும் வந்தனத்தைப்பிரியமாயேற்பவராயிருக்கிறார். **नमस्कारप्रियोभानुः** என்பதும் வெளிப்படை.

இம்மாதிரி ஸூர்யனை நமஸ்காரத்தால் சந்தோஷப்படுத்த ஆருணம் முதல்பிரச்னத்தால், பஞ்சாதிக்கு ஒருநமஸ்காரம் செய்யப்பிரமாணம் எங்கே? என்றல்லவோ கேள்வி. இவ்வித சந்தேகத்தை யான் அடைந்து முடிவுக்குகொண்டுவந்த ஸமாதானத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இதைவிட பிரமாணமுள்ள பதில் வரும் வரையில் இதுவே சித்தாந்தமாகும்.

1. பஞ்சாதிக்கு அல்லது (தசினிக்கு) ஒரு நமஸ்காரம் நியாயமா?

அத்யயனக் கிரஹணகாலத்தில் ஸௌகர்யத்தை உத்தேசித்து, ஸம்ஹிதையாயிருந்தால் ஐம்பது பதமும், சாகையாயிருந்தால் பத்துவாக்கியமும் அளவுசெய்து, கிரகிக்கச் செய்திருக்கின்றனர்பெரியோர்கள்." இவ்விதபஞ்சாசத்தைக்கொண்டு ஒருவைதிக கர்மாவும்செய்யவிதித்திருக்கவில்லை. ஓர்ருக் அல்லதுபலருக்குகள் பாதநியமமற்ற யஜுஸ்ஸுக்கள் அன்றேல் அநுவாகங்கள் இவைகளால் கர்மானுஷ்டானம் கூறியிருக்கிறதேதவிர மேற்கண்ட பஞ்சாசத்தால் ஓரிடமும் இல்லை. அப்படி, ருக்யஜுஸ் அனுவாகங்களிலும், பிரதீகமாயுள்ளதை அதாவது மந்திராரம்பமாயுள்ளதை தனியாக அதன் முழுபாகத்தையும் ஓதவேண்டும். இல்லாவிட்டால் அது அதன்பயனையளிக்காது. இந்த ஸூர்யநமஸ்காரத்தில்

பஞ்சாதிக்கு விநியோகமிருக்கலாமோவென்று விசேஷசங்கை செய்தால், ஓரிடத்தில் காயத்ரீயின் மூன்றுவது பாதம் ஆரம்பமாயிருக்கிறது. அந்த பஞ்சாதி எவ்வளவு பயனளிக்கும்?

வேதம் முழுவதும் பாராயணம் செய்கிறதும் தினந்தோறும் தவாமல் பிரம்மயக்ஞஸ்வாத்யாயம் செய்கிறதும்தவிற மற்றவிடங்களில் அநுஷங்கமில்லாமல் சொல்லுகிறது பிரயோஜனமற்றதே? இந்த ஆருணம் முதல் பிரச்னத்தில் அநுஷங்கம் சொல்லவேண்டிய இடங்களில் விட்டுவிடுகிறதும் பயனற்றதே? ஸாவித்ர, நாசிகேத, சாதுர்ஹோத்ர, வைச்வஸ்ருஜ, ஆருண, என்று ஐந்து சயனங்களில் ஐந்தாவதான இந்த ஆருணகேதுக சயன மந்திரங்களில் சிலவிடத்தில் சூர்ய மஹிமாப்பிரதிபாதகமானஇடங்களிருப்பதால் இதைக்கொண்டு சூர்யநமஸ்காரம் செய்கிறார்கள்.

வாக்யத்துக்கு ஒரு நமஸ்காரம் செய்வதென்றால், 1300-க்கு அதிகப்படுவதால் இயலாதகாரியம். அநுவாகத்திற்கு ஒன்று என்றாலும் 32 ஆகிறபடியால் போதாது. ஆகையால் நூற்றுக்கதிகமாக நமஸ்காரத்தை உத்தேசித்தும், நமஸ்காரம் செய்வோர் சிரமபரிகாரத்தை எதிர்பார்த்தும், இதேமாதிரி 130 பஞ்சாசத்துள்ள அச்சித்திரமிருக்கிறதேயென்றாலும், அதைவிட சூர்யஸ்தோத்திர மந்திரமிதிலிருப்பதாலும், பதிமூன்றுதடவை ஸ்நானம் செய்யவேண்டுமென்றவிடத்தில் கேசவாதிகளைச்சொல்லிக் கொள்வதுபோல் இங்கு132ஆவதற்கு132பஞ்சாதிகளைசொல்லிக்கொண்டும் செய்கிறார்களென்றே நம்பவேண்டியிருக்கிறது. சௌனகோக்த ஷஷ்டயப்தபூர்த்தி சாந்தியில்,

> आयुष्यहोममादित्यवन्दनं बोधिशाखिनः ।
> प्रदक्षिणं शंभुविष्ण्वोरालयप्रक्रमं तथा ॥

என்று கண்டிருப்பதால் இந்த ஸூர்யநமஸ்காரம் பண்டைகாலந்தொடங்கியிருப்பதால் இதற்கு மூன்றுவதும், நாலாவதுமான, ஆசார— மனஸ்துஷ்டிகளே பிரமாணங்களாம். மலையாள ராஜ்யத்தில் ஷடிசூர்யநமஸ்காரத்துக்கு அதிக கௌரவமென்றும் தெரியவருகிறது. எங்கள் குடும்பத்திலும், ஆவணிகார்த்திகை, தைமாதங்களிலுள்ள பானுவாரங்களில் வழக்கமாய் ஷடிநமஸ்காரத்தை பிரியத்துடன் நடத்திவருகிறோம். ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமஹாஸந்நிதானத்திலும் பிரதிமாதங்களிலும்

ஸ்ரீஸ்வாமிகள் புண்ணிய நக்ஷத்திரமான ஜன்மநக்ஷத்திரத்தில் நடந்துவருவதால், இந்துக்களுடைய அநேக கர்மானுஷ்டானங்களில் இதுவும் ஆசாரப்பிரமாணத்தால், அநுமேய சுருதிப் பிரமாணமுள்ளதென்றே நம்பி தெரிவித்துக் கொண்டேன். சுபம்

ஸ்ரீருஹ்றபக்ஞ வீ. உமாமகேச்வரசாஸ்திரி.
காட்டுமன்னார்கோவில்.

---

# நரகசதுர்த்தசிஸ்நாநம்.

நம் பாரதநாட்டில் அநேக நூற்றாண்டுகளாக வைதிகஆசாரங்களில் அநாதரவு ஏற்பட்டிருந்தபோதிலும் இக்காரியத்தைமட்டிலும் இன்னமும் கைவிடாமல் அநுஷ்டானத்தில் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இக்காரியத்தை வெகு விமர்சையாக சந்தோஷத்துடன் நாம் செய்துவருவது விளையாட்டல்ல. தற்காலத்தில் உபநயனம் விவாஹம் முதலிய வைதிகஸம்ஸ்காரகாரியங்கள் எல்லாம் உத்ஸவப்ரதானமாக மாறிக்கொண்டுவருவதுபோல் மஹாபுண்யத்தை அளிக்கக்கூடியதான புராணங்களில் வர்ணிக்கப்பட்ட இந்த நரகசதுர்தசிஸ்நாநமும் உத்ஸவப்ரதானமாகவே நம்மால் அநுஷ்டிக்கப்படுகின்றதேயன்றி உண்மையாகவல்ல. சாஸ்திரங்களில் ஐப்பசிமீ கிருஷ்ணபக்ஷசதுர்தசியன்று பின்னிரவில் ஸ்நாநம்செய்தால் கங்காஸ்நானத்திற்குச்சமமென்று சொல்லியிருப்பதால் அதை ஒரு உத்ஸவகாலமாக நாம் எப்படி நினைத்துக்கொள்வது? ஐப்பசி-மீ கிருஷ்ணபக்ஷசதுர்தசிக்கு நரகசதுர்தசியென்று கூறுவதற்குக் காரணம் ஒன்று சொல்வதுண்டு. அதாவது:— இந்த திதியின் பின்னிரவில்தான் ஸ்ரீமந்நாராயணன் நரகாசுரனைக் கொன்றார். அக்காலத்தில் நரகாசுரன் பகவானைப் பார்த்து "என்னை தாங்கள் எந்த சமயத்தில் பரமபதத்தை அடையும்படி செய்தீர்களோ அதே ஸமயத்தில் இவ்வுலகிலுள்ள யாவரும் மங்களஸ்நாநம் சந்தனதாம்பூலங்கள் நல்ல வஸ்திரம் முதலியவைகளால் நன்கு அலங்கரித்துக்கொண்டு மிகுந்தசந்தோஷத்துடன் இருக்கவேண்டும்" என்று வணக்கமாய் ப்ரார்த்தனை புரிந்துகொண்டதால் நரகசதுர்தசியென்று இதற்கு பெயர் வாய்ந்தது. இவ்வர்த்தத்தையே

यस्यां हतश्चतुर्दश्यां नरको विष्णुना निशि ।
तस्यामभ्यञ्जनं कार्यं नरैर्नरकभीरुभिः ॥

என்ற வாக்யமும் ஸ்பஷ்டமாயறிவிக்கின்றது.

प्रत्यूषआश्वयुक्कृष्णचतुर्दश्यामिनोदये ।
तैलाभ्यंगं च कर्तव्यं स्नानमुष्णेन वारिणा ॥

என்ற ஸ்மிருதிவசனத்தால் நரகசதுர்தசியன்று விடியற்காலையில் உஷ்ணோதகத்தில் தைலத்தால் மங்களஸ்நானம் செய்வது சாஸ்திரீயம் என்று புலப்படுவதால்

प्रातरभ्यक्तदेहस्य प्रायश्चित्तं न विद्यते ।

என்ற விடியற்காலையில் எண்ணை தேய்த்துக்கொள்ளக்கூடாதென்ற நிஷேதத்திற்கும் நரகசதுர்த்தசியைத்தவிர மற்ற காலங்களில் விடியற்காலையில் எண்ணை தேய்த்துக்கொள்வதில்தான் தோஷம் உண்டென்று தாத்பரியம்கொள்ளவேண்டும். ஆகையால் நரகசதுர்தசியன்று தைலத்தால் விடியற்காலையில் மங்களஸ்நானம் செய்வது சாஸ்திரீயமேயாகும். நரகசதுர்தசியன்று விடியற்காலையில் தைலத்தில் லக்ஷ்மீதேவியும் உஷ்ணோதகத்தில் (வெந்நீரில்) கங்காதேவியும் வஸிப்பதாக

तैले लक्ष्मीर्जले गङ्गा दीपावल्याश्चतुर्दशीम् ।

என்பதாதிவாக்யத்தால்புலப்படுகிறது. இம்மஹோத்ஸவதினத்தை தீபாவளியென்றும் அழைப்பது வழக்கம் தீபாவளியென்ற பெயர் இம்மஹோத்ஸவத்திற்கு பொருத்தமாகுமா, ஆகாதாஎன்கிற சந்தேகம் பலருக்கு உண்டாகும். இந்த சந்தேகத்தை விலக்குவதற்காகவே விஷ்ணுபுராணத்தில்,

प्रत्यूषआश्वयुग्दर्शे कृताभ्यङ्गविधिर्नरः ।
दीपैर्नीराजनाद्देवं दीपावलिरिति स्मृता ॥

என்ற சுலோகத்தால் பகவானை தீபங்களால் நீராஜனம் செய்வதால் தீபாவளியென்று பெயர் என்று உரைக்கப்பட்டுள்ளது. அந்த காலத்தில் அனேக ஆபரணங்களையும் புதுவஸ்திரங்களையும் தாம்பூலம் முதலிய மங்கள திரவியங்களையும் உபயோகித்துக் கொள்வது சாஸ்திரசித்தமேயாகும். ஆகவே சாஸ்திரீயமாயும், சிஷ்டாசார சித்தமாயுமுள்ள இக்காரியத்தை சிரத்தையுடன்நாம்

அனுஷ்டித்து வருவது உசிதந்தான். இக்காரியத்தை நாம் நன்ருய் செய்வதற்காகவே சாஸ்திரங்களில் தீபாவளி ஸ்னானகாலமும் விசதமாய் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது மங்களஸ்னானகாலத்தில் சதுர்தசி சம்பந்தம் இருக்கவேண்டும்என்றும், இரண்டு தினங்களில் அக்காலத்தில் சதுர்தசி சம்பந்தம் இருக்குமேயானல் முதலாவது தினத்தில்தான் செய்யவேண்டுமென்றும்,

"पूर्वविद्धचतुर्दश्याम्"

என்பதாதி வசனத்தால் தெரிகின்றது. ஆகவே துலாமாத கிருஷ்ண பக்ஷ சதுர்தசி ஸ்னானமானது கங்காஸ்னானத்திற்கு சமானமானதால் அதை வேண்டாமென்று நினைப்பதற்கு கொஞ்சமும் அவகாசம் ஏற்படாது. ச்ரௌதஸ்மார்த்தாதி கர்மாக்களை செய்ய முடியாத இக்காலத்தில் புண்ய நதீ ஸ்னானம் முதலியவற்றை செய்து தான் சித்தசுத்தியை அடையவேண்டும். கங்கை, காவேரி, சிந்து, துங்கபத்ரா, த்ரிவேணீ, சங்கமம், முதலிய மகா நதிகளில் ஸ்னானம் செய்வது பெரும் புண்யம் என்பது சுருதிப்ரசித்தமல்லவா. அதிலும் நாகசதுர்தசி ஸ்னானம் செய்தபிறகு காவேரியில் ஸ்னானம் செய்வது வெகு விசேஷம், துலாமாதத்தில் யமுனை, சரஸ்வதி என்ற நதிகளுடன் கங்கைக்குசேருவதுபோல் காவேரிநதியில்கங்கைப்ரவேசித்திருப்பதாகபுராணப்ரசித்தம்.மற்ற மாதங்களில் காவேரி ஸ்னானம் செய்வதைக்காட்டிலும் துலாமாதத்தில் விடியற்காலையில் சிரத்தாபக்தி நியமங்களுடன் விதிப்படி காவேரியில் ஸ்னானம்செய்தால் சகலநதிகளிலும் ஸ்னானம் செய்த பலனுண்டென்றும், பிரும்மஹத்தி முதலிய மஹாபாபங்களையும் நிவர்த்தி செய்துவிடுமென்றும் சகல க்ஷேமங்களும் சித்தித்துவிடும் என்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

तुलायां मकरे मेषे प्रातस्नायी यथाभवेत् ।
हविष्यं ब्रह्मचर्यं च महापातकनाशनम् ॥

ஆகையாய் நாகசதுர்தசியன்று விடியற்காலையில் கங்காஸ்னானத்தையும், அதன் பிறகு தக்ஷிணகங்கையாகிய காவேரிஸ்னானத்தையும் சேர்த்து செய்தும், மற்றதுலாமாததினங்களில் காவேரிஸ்னானத்தைச் செய்தும் கிருதார்த்தர்களாக ஆகவேண்டுமாறு வேண்டப்படுகிறது.

வி. ஜகதீச்வரசாஸ்திரிகள்

# ஞானோபாயம்.

அநேககோடி ஜன்மாக்களில் நம்மால் சம்பாதிக்கப்பட்ட நற்றீவினைகளின் பயனாக நமக்கு ஏற்பட்ட இப்பெரும்பவப்பிணியை அகற்றிக்கொள்வதற்கு வேண்டிய உபாயங்களை நாம் சாஸ்திர மூலமாகவும் மகான்களின்மூலமாகவும் தெரிந்துகொண்டு அதைப் பின்பற்றுவதுதான் நமக்கு முதற்கடமையாகும். நாம் ஸ்வயமாக ஏதாவது ஒரு உபாயத்தை அவலம்பித்துக்கொண்டு இப்பவபந்தத்தை விலக்கிக்கொள்ளமுடியாதல்லவா? உபாயங்களில்லாமலும் ஒன்றையும் நாம் சம்பாதித்துக்கொள்ளமுடியாதென்பதும் உலகப்ரசித்தமே. ஆகவே ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதெய்விகமென்ற மூன்று தாபங்களினின்றும் விடுபட்டுபேரின்பசுகஸாம்ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்விப்பதற்காகவே நமக்கு சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நாம் சாஸ்திரங்களை விசாரிக்கவேண்டியதவசியம். சாஸ்திரங்களிலோ மோக்ஷத்திற்காக அநேக உபாயங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் யாவையும் ஒருவன் அனுஷ்டித்து க்ஷேமம் பெறுவது மிகவும் துர்லபம். அவரவர்களுக்கு இஷ்டமாயும் சுலபமாயுமுள்ள உபாயத்தை அவரவர்களவலம்பித்து கிருதார்த்தர்களாகவேண்டுமென்று கருதித்தான் சாஸ்திரங்களில் அநேக உபாயங்கள் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஒருவன் தீயகுணங்களை விலக்கிக்கொண்டு சாஸ்திரங்களில் கூறியவண்ணம் நற்குணங்களை நாடுவது மாத்திரத்தாலேயே சிறந்த தத்வக்ஞானியாய் விளங்கலாமென்றுவேதசாஸ்திரங்களின்சித்தாந்தரஹஸ்யம். காமம்க்ரோதம், லோபம், தம்பம், ஆத்மஸ்துதி, ஹிம்ஸை, பொய், பொறாமை, வஞ்சனை இவை முதலிய துர்குணங்களாலல்லவா ஜீவராசிகளுக்கு தொந்தரவு விளைகின்றது. இவைகளை விலக்கிக்கொண்டு அஹிம்ஸை, சத்தியம் க்ஷமை ஆர்ஜவம் சௌசம் தாய் தந்தை குரு தெய்வம் இவர்களிடத்தில் பக்தி வைராக்யம் சித்த சுத்தி முதலிய நற்குணங்களை நாடுவோமானால் நமக்கு பகவான் அநுக்ரஹம் புரிவாரென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் தீயகுணங்களை விலக்கி நற்குணங்களை நாடுவோமாக.

வி. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

# பொருமை.

உலகத்தில் பொது நன்மைக்குப் பாடுபடுகின்றவர்களுக்கு பொருமையே பூஷணமாம். தன்விஷயத்தில் பிறர் எவ்வளவு உபத்திரவம் செய்யினும் அதை ஒன்றையும் கவனிக்காமலும் ஒரு வாறு தன்னையறியாமல் கோபம் வந்துவிட்டாலும் அதை அடக்கிக்கொண்டும் உலகநன்மைக்குஉழைக்கின்றவர்கள் பொருமையை அடைவதே பொருமையாம். எவ்விதகாரணத்தாலாவது கோபத்தையடைந்துவிட்டால் ஒரு பயனும் கிடைக்காது. அங்ஙனமே—

क्रोधो हि धर्मं हरति यतीनां दुःखसञ्चितम् ।
ततो धर्मविहीनानां गतिरिष्टा न विद्यते ॥

உலகத்தை வெறுத்த துறவிகளுக்கும் உலகத்தின் பொதுநன்மைக்காகப் பிரயத்தினம் செய்து உலகத்தாரோடு ஒத்துவாழும் உபகாரிகளுக்கும் கோபம் உண்டாகவே கூடாது. வந்துவிட்டால் அந்தக் கோபம்; மிகுந்த சிரமப்பட்டு சம்பாதித்த தர்மத்தை விலக்கிவிடும். தர்மம் விலகவே இவர்களுக்கு இஷ்டமான நற்கதி கிடைக்காது.

என்று பாரதம் ஆதிபர்வத்தில் சிருங்கி என்பவரை நோக்கி சமீகரென்ற மஹான் உபதேசித்திருக்கிறார். அன்றியும் இந்தப் பொருமையின் பெருமையை தர்மபுத்திரர் தன்னுடைய அனுபவத்தில் வைத்துக்கொண்டு தன்னுடைய தம்பிகளுக்கும் தர்மபத்தினியான திரௌபதிக்கும் பற்பல இடங்களில் உபதேசித்தும் இருக்கிறார். கையாலாகாதவன் தான் பொருமையை அடைய வேண்டும்; சக்தியுள்ளவன் தன் சாமர்த்தியத்தைக் காட்டி காரியத்தை சாதித்துக்கொள்ளலாமேயென்பது பொருந்தாது.

तस्माद्वलवताचैव दुर्वलेन च नित्यदा ।
क्षन्तव्यं पुरुषेणाहु रापत्सुच विजानता ॥

ஆகையால் பலமுள்ளவனும், பலமில்லாதவனும், சம்பத்து நிறைந்தகாலத்திலும் ஆபத்து நேர்ந்தகாலத்திலும் பொருமையின் பெருமையை நன்கு அறிந்துகொண்டு பொருமையே அடைய வேண்டும் என்று தர்மபுத்திரர் கூறியிருக்கின்றார். ஆகையால் எல்லோரும் பொருமையுடன் ஒருவரிடத்திலும் துவேஷத்தைப் பாராட்டாமல் உலகத்தின் பொதுநன்மைக்காக பாடுபட்டு உழைப்பார்களென்று பிரார்த்திக்கிறோம்.